# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2020.09.02 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விலை: ரூபா 62.00** **தபாற்செலவு : ரூபா 25.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம்*

## *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்.*

***1.*** இச்சட்டம், *அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம்* என எடுத்துக்காட்டப்படலாம்.

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 31 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

***2.*** (இதனகத்துப்பின்னர் "*அரசியலமைப்பு*" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் *அரசியலமைப்பு*, அதன் *31* ஆம் உறுப்புரையின் (*3அ*) (*அ*) (i) என்னும் பந்தியில் "நான்காண்டுகள் முடிவடைந்ததன் பின்னர் எந்நேரத்திலும் மேலுமொரு தவணைக்குப் பதவி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நான்காண்டுகள் முடிவடைந்ததன் பின்னர் எந்நேரத்திலும் இரண்டாவது தவணைக்குப் பதவி" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

*அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையை மாற்றீடு செய்தல்.*

***3.*** *அரசியலமைப்பின் 33ஆம்* உறுப்புரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:-

"*சனாதிபதியின் தத்துவங்களும் பணிகளும்.*

*33.* *அரசியலமைப்பினால்* அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் சனாதிபதிக்கு வெளிப்படையாக அளிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களுக்கும் பணிகளுக்கும் மேலதிகமாக சனாதிபதி பின்வரும் தத்துவங்களைக் கொண்டவராதல் வேண்டும்:-

(அ) பாராளுமன்றத்தின் அமர்வு ஒவ்வொன்றினதும் ஆரம்பத்தில் பாராளுமன்றத்தில் அரசாங்கக் கொள்கைக் கூற்றை அளிப்பதற்கும்;

(ஆ) பாராளுமன்றத்தின் சடங்குமுறையான இருக்கைகளில் தலைமைதாங்குவதற்கும்;

(இ) அரச தூதுவர்கள், உயர் ஆணையாளர்கள், பூரண அதிகாரம் பெற்ற அரசப் பிரதிநிதிகள், ஏனைய இராஜதந்திர முகவர்கள் என்போரை ஏற்று அங்கீகரிப்பதற்கும்

1PL 011963 - 475 (2020/ 09)

அவர்களை நியமித்துப் பொறுப்பளிப்பதற்கும்;

(ஈ) உயர் தொழிலில் பிரபலம் அடைந்துள்ளவர்களாகவும் நடத்தையில் உயர் தராதரங்களையும் உயர் தொழிலில் நேர்மையையும் பேணி வந்துள்ளவர்களாகவும் இருக்கின்ற சட்டத்தரணிகளை சனாதிபதி வழக்குரைஞர்களாக நியமிப்பதற்கும், இப்பந்தியின் கீழ் நியமிக்கப்படும் சனாதிபதி வழக்குரைஞர் ஒவ்வொருவரும் இராணி வழக்குரைஞர் ஒருவரால் இதுவரை அனுபவிக்கப்பட்டு வந்துள்ளவை யான அத்தகைய எல்லா சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்;

(உ) குடியரசின் பொது இலச்சினையைக் காப்பில் வைத்திருப்பதுடன், பிரதம அமைச்சரினதும் அமைச்சரவையின் அமைச்சர்களினதும், பிரதம நீதியரசரினதும் மற்றும் உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளினதும், நியமனப்பத்திரங்கள் மற்றும் அவர் செய்வதற்கு சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளவாறான குடியரசிக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள காணிகள் மற்றும் அசையா ஆதனங்களின் அத்தகைய மானியக்கொடைகள் மற்றும் கையுதிர்ப்புகள், ஆகியவற்றைப் பொது இலச்சினையின் கீழ் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும், அந்த இலச்சினை பொறிக்கப்படவேண்டிய எத்தன்மைத்தான எல்லா ஆவணங்களிலும் இலச்சினையிடுவதற்கும் இலச்சினையை பயன்படுத்துவதற்கும்;

(ஊ) போர் மற்றும் சமாதானம் என்பவற்றைப் பிரகடனம்செய்வதற்கும்; அத்துடன்

(எ) அரசியலமைப்பின் அல்லது எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராதனவற்றையும் அவர் செய்வதற்கு

சர்வதேச சட்டத்தினால், வழக்காறினால், அல்லது வழமையினால் தேவைப்படுத்தப் படுவனவும் அல்லது அதிகாரமளிக்கப் படுவனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்வதற்கும்.".

அரசியலமைப்பின் 33அ என்னும் உறுப்புரையை நீக்குதல்.

**4.** அரசியலமைப்பின் 33அ என்னும் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

அரசியலமைப்பின் 35 ஆம் உறுப்புரையை மாற்றீடு செய்தல்.

**5.** அரசியலமைப்பின் 35 ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:-

"சனாதிபதிக் கெதிராக வழக்குத்தொடுப் பதற்கான விடுபாட்டுரிமை.

35. (1) எவரேனும் ஆள் சனாதிபதியாக பதவி வகிக்கின்றபோது, அவரது பதவிமுறையில் அல்லது தனிப்பட்ட முறையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் அவருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலோ அல்லது தொடர்ந்து நடாத்தப்படுதலோ ஆகாது.

(2) எவரேனும் ஆளுக்கெதிராக ஏதேனும் விவரணத்தினவையுமான வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான காலவெல்லையை வரையறுத்து சட்டத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளவிடத்து, அச்சட்டத்தினால் விதித்துரைக் கப்பட்ட காலப்பகுதி எதனையும் கணிப்பதில் அத்தகைய ஆள் சனாதிபதி என்ற பதவியை வகிக் கின்ற காலப்பகுதி கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுதல் ஆகாது.

(3) இந்த உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளினால் அளிக்கப்பட்டுள்ள விடுபாட்டு ரிமை, 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் சனாதிபதிக்குக் குறித்தளிக்கப்பட்ட அல்லது சனாதிபதியின் பொறுப்பில் இருக்கும் ஏதேனும் விடயம் அல்லது பணி சம்பந்தமான ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் எவை யேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது

129 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் உயர் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது சனாதிபதித் தேர்தல் தொடர்பாக அல்லது மக்கள் தீர்ப்பொன்றின் செல்லுபடியாந்தன்மை தொடர்பாக 130(அ) என்னும் உறுப்புரையின் கீழ் உயர் நீதிமன்றத்திலான வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது பாராளுமன்ற உறுப்பினரொருவரின் தேர்தல் தொடர்பாக 144 ஆம் உறுப்புரையின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலான அல்லது உயர்நீதிமன்றத்திலான வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாகாது:

ஆயின், அத்தகைய ஏதேனும் விடயம் அல்லது பணி சம்பந்தமான எதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தல் தொடர்பான அத்தகைய எவையேனும் வழக்கு நடவடிக்கைகள், சட்டத் துறைத் தலைமையதிபதிக்கு எதிராகத் தொடுக்கப்படுதல் வேண்டும்.''.

*அரசியலமைப்பின் VIIஅ என்னும் அத்தியாயத்தை மாற்றீடு செய்தல்.*

6. அரசியலமைப்பின் அத்தியாயம் VIIஅ இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அத்தியாயம் இடப்படுகின்றது:-

''அத்தியாயம் VIIஅ

**ஆட்சித்துறை**

**பாராளுமன்றப் பேரவை**

*அட்டவணைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக் குழுக்களும் பதவிகளும் தொடர்பில் சனாதிபதி நியமனங் களைச் செய்தல்.*

41அ. (1) இவ்வுறுப்புரைக்கான அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக்குழுக்களின் தவிசாளர்களும் உறுப்பினர்களும் அத்துடன் இவ்வுறுப்புரைக்கான அட்டவணை II இன் I ஆம் பாகத்திலும் II ஆம் பாகத்திலும் குறிப்பீடு செய்யப்பட்ட பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ள ஆட்களும், அத்தகைய ஆணைக்குழுக்களுக்கும் அத்தகைய பதவிகளுக்கும் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய நியமனங்களைச் செய்வதில், சனாதிபதி, பின்வருவோரைக் கொண்டுள்ள (இதனகத்துப்பின்னர் ''பேரவை'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) பாராளுமன்றப் பேரவையின் அவதானிப்புகளைக் கோருதல் வேண்டும்:-

(அ) பிரதம அமைச்சர்;

(ஆ) சபாநாயகர் ;

(இ) எதிர்க்கட்சித் தலைவர்;

(ஈ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக விருக்க வேண்டிய பிரதம அமைச்சரின் ஒரு நியமத்தர்; அத்துடன்

(உ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக விருக்க வேண்டிய எதிர்க்கட்சித் தலைவரின் ஒரு நியமத்தர்:

ஆயின், மேலுள்ள (ஈ) மற்றும் (உ) என்னும் உட்பந்திகளின் நியதிகளின்படி நியமிக்கப்படும் ஆட்கள், மேலுள்ள (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் எந்தச் சமுதாயங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனரோ அந்தச் சமுதாயங்கள் அல்லாத சமுதாயங்களாக வுள்ள சமுதாயங்களைச் சேர்ந்தவர்களாகவிருக் கும் நியமத்தவர்களாகவிருப்பதை உறுதி செய்யும் அத்தகைய முறையில் பெயர்குறித்து நியமிக்கப் படுதல் வேண்டும்.

## அட்டவணை I

1. தேர்தல் ஆணைக்குழு.
2. பகிரங்க சேவை ஆணைக்குழு.
3. தேசிய பொலிசு ஆணைக்குழு.
4. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.
5. இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துகைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு.
6. நிதி ஆணைக்குழு.
7. எல்லை வரையறை ஆணைக்குழு.

## அட்டவணை II

### பாகம் I

1. பிரதம நீதியரசரும் உயர் நீதிமன்ற நீதிபதிகளும்.
2. மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும் நீதிபதிகளும்.

3. தவிசாளர் தவிர்ந்த நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.

**பாகம் II**

1. சட்டத்துறைத் தலைமையதிபதி.
2. கணக்காய்வாளர் தலைமையதிபதி.
3. நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமான்).
4. பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

(2) சபாநாயகர், இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து ஒரு வாரத்தினுள் அத்தகைய பெயர் நியமனங்களைச் செய்வதற்குப் பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்; ஆயின், பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அத்தகைய பெயர் நியமனங்களைச் செய்வதற்குத் தவறினால் சபாநாயகர், இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்திக்கான காப்புவாசகத்தில் குறித்துரைக்கப்படும் கட்டளைக் கற்களைக் கவனத்திற்கெடுத்து, (1) ஆம் பந்தியின் (ஈ) மற்றும் (உ) என்னும் உட்பந்திகளின் நோக்கங்களுக்காக நியமத்தர்களாக இருப்பதற்கென எவரேனும் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெயர் குறித்து நியமிப்பதற்கு முற்படுதல் வேண்டும்.

(3) சனாதிபதி பேரவையின் அவதானிப்புகளைக் கோருகின்றபோது, பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பேரவையின் தமது நியமத்தர்களாக இருக்கவேண்டிய ஆட்களைப் பெயர்குறிக்கத் தவறியிருப்பின், சபாநாயகர், இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்திக்கான காப்புவாசத்தில் குறித்துரைக்கப்படும் கட்டளைக் கற்களைக் கருத்திற்கெடுத்து (1) ஆம் பந்தியின் (ஈ) மற்றும் (உ) என்னும் உட்பந்திகளின் நோக்கங்களுக்காக நியமத்தர்களாக இருப்பதற்கென அத்தகைய பாராளுமன்ற உறுப்பினர்களை பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(4) அரசியலமைப்பின் 64 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்,

சபாநாயகர், இவ்வுறுப்புரையின் நோக்கத்துக்காக, 64 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவர் சபாநாயகராக விருப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்படும்வரை, பாராளுமன்றம் கலைக்கப்படுவதன் மேல் சபாநாயக ராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும். புதிய சபாநாயகர் அதன் மேல் பேரவையின் உறுப்பினரொருவராதல் வேண்டும்.

(5) பாராளுமன்றத்தின் கலைப்பு எவ்வாறிருப் பினும், எதிர்க்கட்சித் தலைவர், இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக, அத்தகைய கலைப்பை அடுத்துவருகின்ற ஒரு பொதுத் தேர்தலுக்குப் பின்னர் பாராளுமன்ற உறுப்பினரொருவர் பாராளுமன்றத் தில் எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்படும் அத்தகைய காலம் வரை, எதிர்க்கட்சித் தலைவராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும். புதிய எதிர்க்கட்சித் தலைவர் அதன் மேல் மேலேயுள்ள பேரவையின் உறுப்பினரொருவராதல் வேண்டும்.

(6) பாராளுமன்றத்தின் கலைப்பு எவ்வாறிருப் பினும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவுள்ள முறையே பிரதம அமைச்சரினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் நியமத்தர்கள், அத்தகைய கலைப்பையடுத்து நடைபெறும் ஒரு பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் வரை, உறுப்பினர்களாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும். பிரதம அமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும், அதன் மேல் முறையே, இவ்வுறுப்புரை யின் (1) ஆம் பந்தியின் (ஈ) மற்றும் (உ) என்னும் உட்பந்திகளின் நியதிகளின்படி தமது நியமத்தர்களாக விருப்பதற்கு இரு புதிய பாராளுமன்ற உறுப்பினர் களைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(7) இவ்வுறுப்புரையின் கீழ் அமைக்கப்பட்ட பேரவையின் பதவிக்காலம், 62 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதிக்கு நீடித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பதவிக்காலம், 70 ஆம் உறுப்புரையின்

நியதிகளின்படி பாராளுமன்றத்தின் ஏதேனும் அமர்வு நிறுத்தத்தினால் பாதிக்கப்படுதலுமாகாது:

ஆயின், முறையே பிரதம அமைச்சரினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் நியமத்தர்களாக நியமிக்கப்பட்ட ஆட்கள், அத்தகைய பதவிக்காலத்தின் போது, சனாதிபதியினால் அகற்றப்படலாம் அல்லது அத்தகைய நியமத்தர் இயலாமைக்குட்படும் பட்சத்தில் (1) ஆம் பந்திக்கான காப்புவாசகத்தில் குறித்துரைக் கப்பட்ட கட்டளைக் கற்களைக் கவனத்துட்கொண்டு, பேரவையில் தமது நியமத்தராகவிருப்பதற்கு வேறொரு பாராளுமன்ற உறுப்பினரைப் பெயர் குறித்து நியமிக்கும்படி விடயத்துக்கேற்ப, பிரதம அமைச்சரை அல்லது எதிர்க்கட்சித் தலைவரைச் சனாதிபதி தேவைப்படுத்தலாம். அத்தகைய பட்சத்தில், விடயத்துக்கேற்ப, ஒன்றில் அகற்றுகை யினால் அல்லது இயலாமையினால் உருவாக்கப்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பெயர்குறித்து நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர், அவர் எந்த உறுப்பினரின் வெற்றிடத்துக்காகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப் பகுதிக்கு மட்டுமே பேரவையின் உறுப்பினராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(8) (அ) ஓராம் பந்தியின் கீழ் பேரவையின் அவதானிப்புகளைச் சனாதிபதி கோரும் போது, அத்தகைய அவதானிப்புகளைக் கோரும் தேதியிலிருந்து ஒரு வாரகாலப் பகுதியினுள், அவர், அத்தகைய நியமனங்களுக்காக அவரினால் முன் மொழியப்பட்ட ஆட்கள் பற்றிய பேரவையின் அவதானிப்புகளைச் சபாநாயகரின் மூலம் தமக்கு அறிவிக்கும்படி பேரவையை அவர் தேவைப்படுத் துதல் வேண்டும்.

(ஆ) பேரவை குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதி யினுள் அதனது அவதானிப்புகளை அவருக்கு அறிவிக்கத் தவறினால், சனாதிபதி, மேற்கூறப்பட்ட நியமனங்களைச் செய்வதற்கு முற்படுதல் வேண்டும்.

(9) பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப் பட்ட ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் தலைவர், இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்திக்கான அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக்குழுவொன்றின் தவிசாளராக அல்லது உறுப்பினராக நியமிக்கப்படுவதற்காக எவரேனு மாளின் பெயரை முன்மொழிய விரும்புமிடத்து, அவர், பேரவையின் அவதானிப்புகளைச் சனாதிபதி கோரும் திகதியிலிருந்து ஒரு வார காலப் பகுதியினுள், அது தொடர்பாக எவரேனுமாளின் பெயரைச் சபா நாயகருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். சனாதிபதி அத்தகைய நியமனங்களைச் செய்யும்போது, அத்தகைய பெயர்களைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

(10) இவ்வுறுப்புரையின் அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்டவரும், ஓர் ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினராக இருப்பதற்கு நியமிக்கப்பட்டவருமான ஆளெவரும் அல்லது இவ்வுறுப்புரைக்கான அட்டவணை II இன் I ஆம் பாகத்திலும் II ஆம் பாகத்திலும் குறிப்பீடு செய்யப்பட்ட பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட ஆட்களுள் எவரும், அரசியலமைப்பில் அல்லது அத்தகைய நோக்கத்துக் காக இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அகற்றப்படுதலாகாது. அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்படாதவிடத்து, அத்தகைய ஆள் சனாதிபதியினால் அகற்றப்படுதல் வேண்டும்.

(11) பேரவையின் அவதானிப்புகளைப் பெற்றுக் கொள்வதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையானது சபாநாயகரால் தீர்மானிக்கப்பட்ட வாறாக இருத்தல் வேண்டும்.".

அரசியலமைப் பின் VIII ஆம் அத்தியாயத்தை மாற்றீடு செய்தல்.

7. அரசியலமைப்பின் VIII ஆம் அத்தியாயம் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அத்தியாயம் இடப்படுகின்றது:-

## "அத்தியாயம் VIII

## ஆட்சித்துறை

### அமைச்சரவை

*சனாதிபதியின் பொறுப்பு.*

**42.** சனாதிபதி, அரசியலமைப்பின் கீழும், பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றிய அப்போதைக்குள்ள சட்டம் உட்பட எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழும், தமது தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் முறைப்படி பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

*அமைச்சரவை.*

**43.** (1) குடியரசின் அரசாங்கத்தை நெறிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொறுப்பாக்கப்பட்ட ஓர் அமைச்சரவை இருத்தல் வேண்டும்; அந்த அமைச்சரவை, பாராளுமன்றத்துக்குப் கூட்டாகப் பொறுப்பாயிருத்தலும் மறுமொழி கூறற்பாலதாய் இருத்தலும் வேண்டும்.

(2) சனாதிபதி, அமைச்சரவையின் ஓர் உறுப்பினராயிருத்தல் வேண்டும் என்பதுடன் அமைச்சரவையின் தலைவராயிருத்தலும் வேண்டும்:

ஆயின், அரசிலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை கலைக்கப்படுவது எப்படியிருப்பினும், சனாதிபதி தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்.

(3) சனாதிபதி, அவரது கருத்துப்படி பாராளுமன்றத்தின் எந்த உறுப்பினர் பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அதிகம் வாய்ப்புள்ளவராக இருக்கிறாரோ அந்த உறுப்பினரைப் பிரதம அமைச்சராக நியமித்தல் வேண்டும்.

*அமைச்சரவையின் அமைச்சர்களும் அவர்களின் விடயங்களும் பணிகளும்.*

**44.** (1) சனாதிபதி காலத்துக்குக் காலம், பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனை அவசியமானதெனக் கருதுமிடத்து, அத்தகைய கலந்தாலோசனையுடன்,

(அ) அமைச்சரவையின் அமைச்சர்களினதும் அமைச்சுக்களினதும் எண்ணிக்கை பற்றியும் அத்தகைய அமைச்சர்களுக்கு விடயங்களையும் பணிகளையும் குறித்தளிப்பது பற்றியும் தீர்மானித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட அமைச்சுக்களுக்குப் பொறுப்பாயிருப்பதற்கெனப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களை நியமித்தல் வேண்டும்.

(2) சனாதிபதி தமக்கென்று எவ்விடயத்தையும் அல்லது எப்பணிகளையும் குறித்தளிக்கலாம் என்பதுடன் இவ்வுறுப்புரை யின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது 45 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ், எவரேனும் அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படாத ஏதேனும் விடயத்திற்கு அல்லது பணிக்குப் பொறுப்பாக இருத்தலும் வேண்டும்; அத்துடன், அந்நோக்கத்திற்கென, தமது பொறுப்பில் இருக்க வேண்டிய அமைச்சுக்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கலாம் என்பதுடன், அதற்கிணங்க, அத்தகைய விடயம் அல்லது பணி குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் பற்றி அரசியலமைப்பில் அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் உள்ள குறிப்பீடெதுவும் சனாதிபதி பற்றிய குறிப்பீடாக வாசிக்கப்பட்டுப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(3) சனாதிபதி, குறித்தளிக்கப்பட்ட விடயங்களையும் பணிகளையும் அமைச்சரவையின் அமைப்பையும் எந்நேரத்திலும் மாற்றலாம். அத்தகைய மாற்றங்கள் அமைச்சரவையின் இடையறாத் தொடரச்சியையும் பாராளுமன்றத்தின்பால் அதற்குள்ள பொறுப் பின் இடையறாத் தொடர்ச்சியையும் பாதித்தல் ஆகாது.

அமைச்சரவையின் உறுப்பினர்களாகவிராத அமைச்சர்களும், அவர்களது அமைச்சுக்களும் விடயங்களும் பணிகளும்.

45. (1) சனாதிபதி, காலத்துக்குக் காலம் பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனை அவசியமானதெனக் கருதுமிடத்து, அத்தகைய கலந்தாலோசனையுடன்,

(அ) பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து, அமைச்சரவையின் உறுப்பினர்களாக இல்லாதவர்களை அமைச்சர்களாக நியமிக்கலாம் ; அத்துடன்

(ஆ) அத்தகைய அமைச்சர்களுக்கான விடயங்கள், பணிகள் என்பவற்றைக் குறித்தளித்தலையும், அத்தகைய அமைச்சர்களின் பொறுப்பிலிருக்க வேண்டிய அமைச்சுக்கள் எவையேனுமிருப்பின் அவற்றையும் தீர்மானிக்கலாம்.

(2) சனாதிபதி, இவ்வுறுப்புரையின், (1) ஆம் பந்தியின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் நியமனத்தை அல்லது குறித்தளித்தலை எந்த நேரத்திலும் மாற்றலாம்.

(3) இவ்வுறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர் ஒவ்வொருவரும் அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் பொறுப்பாயிருத்தலும் மறுமொழி கூறற்பாலராய் இருத்தலும் வேண்டும்.

(4) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர், அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் விடயத்துக்குரிய அல்லது பணிக்குரிய ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை, அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை, அமைச்சரவையின் உறுப்பினராக இராத ஓர் அமைச்சருக்கு, வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் கையளிக்கலாம். அத்துடன் இந்தப் பந்தியின் கீழ் அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை, அமைச்சரவையின் அத்தகைய அமைச்சருக்கு அந்தத் தத்துவத்தை அல்லது கடமையை அளித்த அல்லது சுமத்திய எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும் பிரயோகித்தலும் நிறைவேற்று தலும், அத்தகைய வேறு அமைச்சருக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.

பிரதி அமைச்சர்கள்.

46. (1) சனாதிபதி, காலத்துக்குக் காலம், பிரதம அமைச்சருடனான கலந்தாலோசனை அவசியமானதெனக் கருதுமிடத்து, அத்தகைய கலந்தாலோசனையுடன், அமைச்சரவையின் அமைச்சர்கள்

தமது கடமைகளை நிறைவேற்றுவதில் அவர்களுக்கு உதவுவதற்கெனப் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து பிரதி அமைச்சர்களை நியமிக்கலாம்.

(2) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் விடயம் அல்லது பணி தொடர்பிலான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் தமது பிரதியமைச்சருக்குக் கையளிக்கலாம். அத்துடன், அந்தத் தத்துவம் அல்லது கடமை அமைச்சரவையின் அத்தகைய அமைச்சருக்கு எந்த எழுத்திலான சட்டத்தினால் அளிக்கப் பட்டுள்ளதோ அல்லது சுமத்தப்பட்டுள்ளதோ அந்த எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எப்படி யிருப்பினும், இப்பந்தியின் கீழ் அவருக்குக் கையளிக் கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையைப் பிரயோகிப்பதும் நிறைவேற்றுவதும் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

*பிரதம அமைச்சர், அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் என்போரின் பதவிக்காலம்.*

**47.** பிரதம அமைச்சர், அமைச்சரவையின் ஓர் அமைச்சர் அல்லது வேறு எவரேனும் அமைச்சர் அல்லது பிரதியமைச்சர் –

(அ) சனாதிபதியின் கைப்பட ஒரு கடிதத்தின் மூலம் பதவியினின்றும் அவர் அகற்றப்பட்டிருந்தாலொழிய;

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் தம் கைப்பட கடிதத்தின் மூலம் அவரது பதவியைத் துறந்தாலொழிய; அல்லது

(இ) பாராளுமன்ற உறுப்பினராக அவர் இல்லாதொழிந்தாலொழிய,

அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை தொடர்ந்து பணியாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் கலைப்புக்குப் பின்னரான அமைச்சரவை.*

48. (1) பாராளுமன்றத்தின் கலைப்புக்கு நேர் முன்னர் பணியாற்றுகின்ற அமைச்சரவை, அத்தகைய கலைப்பு எவ்வாறிருப்பினும், தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், பொதுத் தேர்தல் முடிவடைந்ததும் பணியாற்றாதொழிதலும் வேண்டும். அதற்கிணங்க, பிரதம அமைச்சரும், அமைச்சரவையின் அமைச்சர்களும், வேறு அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும், 47 ஆம் உறுப்புரையின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாகப் பதவி வகிக்காதொழிந்தால் ஒழிய, தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும்.

(2) பாராளுமன்றத்தின் கலைப்புக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுத்தலுக்கும் இடைப்பட்ட காலத்தின்போது, பிரதம அமைசச்சர் இறந்தமை, பதவியிலிருந்து அகற்றப்பட்டமை அல்லது பதவியைத் துறந்தமை எவ்வாறிருப்பினும், அமைச்சரவையானது அமைச்சரவையின் உறுப்பினர்களாக ஏனைய அமைச்சரவையின் அமைச்சர்களுடன் பொதுத் தேர்தல் முடிவுறும் வரை தொடர்ந்தும் பணியாற்றுதல் வேண்டும். பிரதம அமைச்சரின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கவும் நிறைவேற்றவும் புரியவும் என அத்தகைய அமைச்சர் ஒருவரை சனாதிபதி நியமிக்கலாம், அல்லது அவற்றைத் தாமே பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அத்துடன் புரியலாம். அத்தகைய வேறு அமைச்சர் எவரும் இல்லாவிடின், பொதுத் தேர்தல் முடிவடையும்வரை அமைச்சரவையின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் சனாதிபதி தாமே பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் அத்துடன் புரிதலும் வேண்டும்.

(3) பாராளுமன்றம் கலைவுக்கும் பொதுத்தேர்தல் முடிவுறுத்தலுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியின் போது, அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் அல்லது வேறெவரேனும் அமைச்சர் இறந்தால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டால் அல்லது பதவியைத் துறந்தால், சனாதிபதி, அத்தகைய அமைச்சுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென அல்லது அத்தகைய அமைச்சரின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கவும் நிறைவேற்றவும் புரியவும் என வேறெவரேனும் அமைச்சரை நியமிக்கலாம் அல்லது தாமே அந்த

அமைச்சின் பொறுப்பை ஏற்கலாம், அல்லது அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம், அத்துடன் புரியலாம்.

அமைச்சரவையைக் கலைத்தல்.

49. (1) பிரதம அமைச்சர், பாராளுமன்றம் கலைக்கப்பட்டதற்கும் பொதுத் தேர்தல் முடிவுறுத்தலுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியின் போது தவிர இறப்பதன்மூலம், பதவியினின்றும் அகற்றப் படுவதன் மூலம் அல்லது பதவி துறப்பதன் மூலம் அல்லது வேறு வகையாகப் பதவி வகிக்காதொழிந்த தன் மேல், சனாதிபதி 70 ஆம் உறுப்புரையின் கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பாராளு மன்றத்தைக் கலைதிருந்தாலொழிய, அமைச்சரவை கலைந்ததாதல் வேண்டும் என்பதுடன் சனாதிபதி 43, 44, 45, 46 ஆகிய உறுப்புரைகளின் நியதிகளின்படி ஒரு பிரதம அமைச்சரையும், அமைச்சரவையின் அமைச்சர்களையும், வேறு அமைச்சர்களையும், பிரதியமைச்சர் களையும் நியமித்தலும் வேண்டும்.

ஆயின், பிரதம அமைச்சர் அவ்வாறு பதவி வகிக்காதொழிந்ததன் பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால், பொதுத் தேர்தல் முடிவடையும் வரை அமைச்சரவை, அமைச்சரவையின் உறுப்பினர் களாக அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களுடன் தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும். சனாதிபதி, பிரதம அமைச்சரின் தத்துவங்களையும், கடமை களையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்குமென அத்தகைய அமைச்சர் ஒருவரை நியமிக்கலாம். அல்லது சனாதிபதி தாமே அவற்றைப் பிரயோகிக்கலாம். நிறைவேற்றலாம் அத்துடன் புரியலாம் என்பதுடன், 48 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) பாராளுமன்றம் அரசாங்கக் கொள்கைக்கூற்றை அல்லது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை நிராகரித்தால் அல்லது அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை நிறைவேற்றினால் அமைச்சரவை கலைக்கப்பட்டதாதல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி, 70 ஆம் உறுப்புரையின் கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பாராளுமன்றத் தைக் கலைத்திருந்தாலொழிய 43 ஆம், 44 ஆம், 45 ஆம், 46 ஆம் உறுப்புரைகளின் நியதிகளின்படி பிரதம அமைச்சர் ஒருவரையும் அமைச்சரவையின் அமைச்சர்களையும், வேறு அமைச்சர்களையும் பிரதியமைச்சர்களையும் நியமித்தலும் வேண்டும்.

பதில் அமைச்சரும் பதில் பிரதி அமைச்சரும்.

50. அமைச்சரவையின் ஓர் அமைச்சர், வேறு அமைச்சர் அல்லது பிரதியமைச்சர், தமது பதவிக் குரிய பணிகளை நிறைவேற்று வதற்கு எப்போதேனும் இயலாதிருக்கும் போது, சொல்லப்பட்ட அமைச்சரவை அமைச்சரின், வேறு அமைச்சரின் அல்லது பிரதி அமைச்சரின் இடத்தில் பதிற் கடமையாற்றுவதற்கென சனாதிபதி, பாராளுமன்றத்தின் உறுப்பினர் எவரையும் நியமிக்கலாம்.

அமைச்சரவைச் செயலாளர்.

51. அமைச்சரவைக்குச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் வேண்டும். செயலாளர், சனாதிபதியின் பணிப்புக்கு அமைய, அமைச்சரவையின் அலுவலகத்திற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும் என்பதுடன், சனாதிபதியினால் அல்லது அமைச்சரவையினால் அவருக்குக் குறித்தளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு பணிகளையும், கடமைகளையும் அவர் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

அமைச்சுக்களின் செயலாளர்கள்.

52. (1) ஒவ்வோர் அமைச்சுக்கும் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும். அவர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சின் செயலாளர், அவரது அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அவரது அமைச்சரின் பொறுப்பிலுள்ள அரசாங்கத் திணைக்களங்களின் மீது அல்லது வேறு நிறுவனங்களின் மீது மேற்பார்வை செலுத்துதல் வேண்டும்.

(3) ஓர் அமைச்சின் செயலாளர் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை கலைக்கப்படுவதன் மேல், அல்லது 44 ஆம் உறுப்புரையின் கீழ் அல்லது 45 ஆம் உறுப்புரையின் கீழ் சனாதிபதியினாற் செய்யப்படுவதும் அந்த அமைச்சினை இல்லாதொழிக்கின்றதும் ஆன ஒரு தீர்மானம் செய்யப்பட்டதன் மேல் செயலாளர் பதவியை வகிக்காதொழிதல் வேண்டும்.

(4) ஓர் அமைச்சின் செயலாளர் அவ்வாறு பதவி வகிக்காதொழியுமிடத்து, அமைச்சரவை அத்தகைய செயலாளரை, பகிரங்க சேவையிலுள்ள வேறேதேனும் பதவிக்கு நியமிக்கலாம்.

ஆயின், செயலாளராக நியமிக்கப்படுவதற்கு நேர் முன்னரான, பகிரங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் அல்லது ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்தின் சேவையில் இருந்த ஆளொருவர், அத்தகைய சேவையிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்

என்பதுடன் அவர் செயலாளர் பதவியை அவ்வாறு வகிக்காதொழிந்ததன் மேல் அவரது முதுமுறையை இழக்காது அத்தகைய சேவையில் அவர் வகித்த பதவியை மீளவகிப்பதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் (4) ஆம் பந்திக்கான காப்புவாசகம் அமைச்சு ஒன்றின் செயலாளர் ஒருவருக்கு -

(அ) ஒழுக்காற்றுக் காரணங்களுக்காகப் பதவி விலக்கல் தவிர்ந்த வேறு வகையில் அத்தகைய ஆளின் சேவைகளைச் சனாதிபதி முடிவுறுத்தியதன் மேல் ; அல்லது

(ஆ) அவர் பதவிதுறக்கும் தேதியன்று அவருக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் முடிவுறாதிருந்தாலொழிய அல்லது அவருக்கெதிராக அந்நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தேசமிருந்தாலொழிய, அவர் பதவிதுறந்த தன்மேல்,

ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) இவ்வுறுப்புரையின் (4) ஆம், (5) ஆம் பந்திகளின் நோக்கங்களுக்கென, சனாதிபதியின் செயலாளர் பதவியை, அமைச்சு ஒன்றின் செயலாளர், பதவியை அல்லது சனாதிபதியின் பணியாட்டொகுதியிலுள்ள சேவை ஏதேனும் பதவியை அல்லது அத்தகைய பதவிகளில் ஏதேனும் ஒன்றோ பலவோவாயபதவிகளை தொடர்ந்து வகித்துள்ளவரான எவரேனுமாள், கடைசியாக எந்தப் பதவியை வகித்தாரோ அந்தப் பதவியைத் தொடர்ந்து வகித்தவராகக் கருதப்படுதல் வேண்டும்.-

(7) இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக,

(அ) நிருவாகத்துக்கான ஆணையாளர் அலுவலகம், பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலகம், (ஓம்புட்சுமான்), பகிரங்க சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் அமைச்சரவைச் செயலாளர் அலுவலகம்; அத்துடன்

(ஆ) தேசிய கணக்காய்வு அலுவலகம்,

அரசாங்கத் திணைக்களங்கள் அல்லவெனக் கருதப்படுதல் வேண்டும்.

*பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை*

53. இந்த அத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும் ஆளொருவர், அத்தகைய ஆள் நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்து கீழொப்பமிடும் வரை அல்லது உறுதியுரையை

மொழிந்து கீழொப்பமிடும் வரை அவரது பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளுதலாகாது.”.

*அரசியலமைப்பின் 54 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**8.** அரசியலமைப்பின் 54 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

‘‘(1) சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஒன்பது உறுப்பினர்களுக்கு மேற்படாதோரைக் கொண்டிருக்க வேண்டியதும், (இவ்வத்தியாயத்தில் ‘‘ஆணைக்குழு’’ எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) பகிரங்க சேவை ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும்; அவர்களுள் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாதோர், பகிரங்க அலுவலர்களாகப் பதினைந் தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள ஆட்களாகவிருத்தல் வேண்டும். சனாதிபதி, அதன் தவிசாளராக அத்தகைய உறுப்பினர்களில் ஒருவரை நியமித்தல் வேண்டும்.”.

(2) அவ்வுறுப்புரையின் (4) ஆம் பந்தியில் “அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக “சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அதன் (7) ஆம் பந்தியில் “அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக விருப்பதற்குத்’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராகவிருப்பதற்குத்’’ என்னும் சொற்களை இடுவதன்மூலமும்,

*அரசியலமைப்பின் 56 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**9.** அரசியலமைப்பின் 56 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் “ஆணைக்குழுவினாற் குறித்துரைக்கப்படுகின்றவாறான” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “அமைச்சரவையினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான’’ என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 57 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**10.** அரசியலமைப்பின் 57 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் ‘‘ஆணைக்குழுவினாற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘அமைச்சரவையினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான’’ என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 61அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**11.** அரசியலமைப்பின் 61அ என்னும் உறுப்புரை, "59 ஆம் உறுப்புரையினதும் 126 ஆம் உறுப்புரையினதும் ஏற்பாடுகளுக்கமைவாக" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "126 ஆம் உறுப்புரையின் (1), (2), (3), (4) மற்றும் (5) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைவாக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 61உ மற்றும் 61ஊ என்னும் உறுப் புரைகளை மாற்றீடு செய்தல்.*

**12.** அரசியலமைப்பின் 61உ மற்றும் 61ஊ என்னும் உறுப்புரைகள் இத்தால் நீக்கப்பட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உறுப்புரைகள் இடப்படுகின்றன.

*"சனாதிபதியி னாலான நியமனங்கள்.*

61உ. சனாதிபதி பின்வருவோரை நியமித்தல் வேண்டும்:-

(அ) தரைப்படையின், கடற்படையின் மற்றும் வான்படை யின் தலைவர்கள்; அத்துடன்

(ஆ) சட்டத்துறைத் தலைமையதிபதி.

*பொருள் கோடல்.*

61ஊ. இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காகப் "பகிரங்க அலுவலர்" என்பது, தரைப்படை, கடற்படை அல்லது வான்படை, உறுப்பினரொருவரை, தேர்தல் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அத்தகைய ஆணைக்குழுவின் அலுவலரொருவரை அல்லது நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப் பட்ட பகிரங்க அலுவலரொருவரை உள்ளடக்காது.".

*அரசியலமைப் பின் 65 ஆம் உறுப்புரை யைத் திருத்துதல்.*

**13.** அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(1) சனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டியவரும் நன்னடத்தையின்போது பதவி வகிக்க வேண்டிய வருமான பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஒருவர் இருத்தல் வேண்டும்.".

(2) அவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(6) செயலாளர் நாயகம் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவுள்ள போதெல்லாம், சனாதிபதி, செயலாளர் நாயகத்தின் இடத்தில் செயலாற்றுவதற்கு ஆளொருவரை நியமிக்கலாம்.".

அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

14. அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(1) சனாதிபதி, காலத்துக்குக் காலம், பிரகடனத்தின் மூலம் பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைக்கலாம், அமர்வு நிறுத்தலாம், அத்துடன் கலைக்கலாம்:

ஆயின் -

(அ) (ஈ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, சனாதிபதியினால் பாராளுமன்றம் கலைக்கப் பட்டதன் விளைவாகப் பொதுத் தேர்தலொன்று நடாத்தப்பட்டுள்ளபோது, அத்தகைய பொதுத் தேர்தற்தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதி முடிவடையும் வரை, பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி பாராளுமன்றம், தீர்மானத்தின் மூலம் சனாதிபதியை வேண்டினாலொழிய, சனாதிபதி, அதன் பின்னர் பாராளுமன்றத்தைக் கலைத்தலாகாது;

(ஆ) பொதுத் தேர்தலொன்றின் பின்னர் வரும் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின் தொடக்கத்தின் போது அரச கொள்கைக் கூற்று நிராகரிக்கப்பட்டதன் மேல் சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தல் ஆகாது;

(இ) உட்பந்தி (ஈ) இன் ஏற்பாடுகளுக்கமைய, 38 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (அ) மற்றும் (ஆ) என்னும் உட்பந்திகளின் தேவைப்பாடுகளுக் கிணங்கியொழுகும் தீர்மானமொன்றைச் சபாநாயகர் ஏற்றுக்கவனித்த பின்னர், பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர, சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தலாகாது; அதாவது -

(i) 38 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியினால் தேவைப்படுத்தப் பட்டவாறாக அத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்படாதிருந்தாலொழிய;

(ii) சனாதிபதி அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதவராக வில்லை என அல்லது அத்தகைய தீர்மானத்தில் அடங்கியுள்ள வேறு குற்றச்சார்த்தல்கள் எவற்றுக்கும் சனாதிபதி குற்றவாளியாக இருக்கவில்லை என உயர் நீதிமன்றம் தீர்மானித்து அறிக்கை செய்தாலொழிய;

(iii) சனாதிபதியை அகற்றுவதற்கான விளைவுத் தீர்மானம், 38 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக நிறைவேற்றப்படா திருந்தாலொழிய; அல்லது

(iv) பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு சனாதிபதி யினால் பாராளுமன்றம் தீர்மானத்தின் மூலம் வேண்டினாலொழிய,

சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தலாகாது;

(ஈ) ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைப் பாராளுமன்றம் நிராகரித்ததன் விளைவாக சனாதிபதி பாராளு மன்றத்தைக் கலைக்காதுள்ளவிடத்து. அடுத்த ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைப் பாராளுமன்றம் நிராகரித்ததால் சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தல் வேண்டும்.".

**அரசியலமைப்பின் 78 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.**

15. அரசியலமைப்பின் 78 ஆம் உறுப்புரை பின்வருமாறு இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்;-

"(1) ஒவ்வொரு சட்டமூலமும், அது பாராளு மன்றத்தின் ஒழுங்குபத்திரத்தில் இடப்படுவதற்கு ஆகக்

குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

(2) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(3) பாராளுமன்றத்தில் சட்டமூலமொன்றுக்கு முன்மொழிவு செய்யப்படும் ஏதேனும் திருத்தம் அத்தகைய சட்டமூலத்தின் தகைமைகள் மற்றும் கொள்கைகளிலிருந்து விலகுதலாகாது.".

*அரசியலமைப்பின் 85 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**16.** அரசியலமைப்பின் 85 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(2) சனாதிபதி, அவரது தற்றுணிபின்படி, பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ள (அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டை நீக்குவதற்கான அல்லது திருத்துவதற்கான அல்லது அரசியலமைப்புக்கு ஏதேனும் ஏற்பாட்டைச் சேர்ப்பதற்கான அல்லது அரசியலமைப்பை நீக்கிவிட்டு மாற்றீடு செய்வதற்கான சட்டமூலமாக விராத அல்லது அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டுடன் ஒவ்வாததாகவுள்ள) ஏதேனும் சட்டமூலத்தை மக்கள் தீர்ப்பின் மூலம் மக்களுக்குச் சமர்ப்பிக்கலாம்.".

*அரசியலமைப்பின் 91 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**17.** அரசியலமைப்பின் 91 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பந்தியின் (V) (Vஅ) மற்றும் (Vஇ) என்னும் விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயங்களை இடுவதன்மூலமும் :-

"(V) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதி,

(Vஅ) தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர்;

(Vஆ) தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர்," ;

(2) அவ்வுட்பிரிவின் (vii) ஆம் விடயத்தில் "ஏதேனும் பதவியை வகிக்கும் பகிரங்க அலுவலராக அல்லது இலங்கை அரச கணக்காய்வு சேவையின் உறுப்பினராக விருந்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும்

பதவியை வகிக்கும் அலுவலராகவிருந்தால்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (viii) ஆம் விடயத்தில் ''ஏதேனும் பதவியை வகிக்கும் பகிரங்க அலுவலராக அல்லது இலங்கை அரச கணக்காய்வு சேவையின் உறுப்பினராகவிருந்தால்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் பதவியை வகிக்கும் பகிரங்க அலுவலராகவிருந்தால்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அவ் உட்பந்தியின் (xiii) ஆம் விடயத்தை நீக்கிவிடுவதன் மூலமும்.

*அரசியலமைப்பின் 92 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**18**. அரசியலமைப்பின் 92 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (அ) என்னும் பந்தியில் ''முப்பத்தைந்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''முப்பது'' என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**19**. அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

''(1) ஏதேனும் உயர்தொழிலில் அல்லது நிருவாகம் அல்லது கல்வி என்ற துறைகளில் சிறப்பெய்தியுள்ள ஆட்களிலிருந்து சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ளதும் (இவ்வத்தியாயத்தில் ''ஆணைக்குழு'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) தேர்தல் ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும். சனாதிபதி, அதன் தவிசாளராக ஓர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.'' ;

(2) அவ்வுறுப்புரையின் (7) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

''(7) சனாதிபதி இரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு ஆணைக்குழு

தொடர்பான தமது கடமைகளைப் புரியாதிருப்பதற்கு உறுப்பினரொருவருக்கு லீவு வழங்கலாம் என்பதுடன் அத்தகைய லீவுக்காலப்பகுதிக்குத் தற்காலிக உறுப்பினரொருவராக இருப்பதற்கு, ஆணைக்குழுவின் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமைபெற்ற ஆளொருவரையும் நியமிக்கலாம்.”.

*அரசியலமைப்பின் 104ஆ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**20.** அரசியலமைப்பின் 104ஆ என்னும் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (4) (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் “தேர்தலை அல்லது அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற ஏதேனும் அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் எவரேனும் வேட்பாளரை” என்னும் சொற்களுக்குப் பதிலாக “அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளரை அல்லது ஏதேனும் அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைத் தேர்ந்தெடுத்தலை” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுறுப்புரையின் (4) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

“(4அ) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, விடயத்துக்கேற்ப, தேர்தலொன்றை நடாத்துவதற்கான கட்டளையொன்றை ஆக்கும் தேதியன்று அல்லது மக்கள் தீர்ப்பொன்றை நடாத்தும்படி தேவைப்படுத்து கின்ற பிரகடனம் செய்யும் தேதியன்று தொடங்குகின்ற காலப்பகுதியின்போது ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஏதேனும் வழிகாட்டு நெறியானது –

(அ) விடயத்துக்கேற்ப, முறையான தேர்தலை நடாத்துவதுடன் அல்லது முறையான மக்கள் தீர்ப்பை நடாத்துவதுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட கருமங்களுக்கு வரையறுக்கப் படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பகிரங்க சேவை தொடர்பான ஏதேனும் கருமத்துடன் அல்லது அரசியலமைப்பின் கீழ் நியமிக்கப்பட்ட விடயத்துக்கேற்ப, பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அல்லது நீதிச்சேவை

ஆணைக்குழுவின் நிருவாக நோக்கெல்லைக் குள் உள்ள ஏதேனும் கருமத்துடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருத்தலாகாது,

எனக் குறிப்பிடப்படுகின்றது.'' ;

(3) அவ்வுறுப்புரையின் 5(ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

''(ஆ) விடயத்துக்கேற்ப, எவரேனும் ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்புத் தொழிற்படுத்துநர் அல்லது செய்தித்தாளொன்றின் உரிமையாளர் அல்லது வெளியீட்டாளர், பந்தி (அ) இன் கீழ் அவர்களுக்கு வழங்கப்பட்டவாறான எவையேனும் வழிகாட்டு நெறிகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத் துவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் அவர்களின் கடமையாதல் வேண்டும்.''.

**21.** அரசியலமைப்பின் 104உ என்னும் உறுப்புரை, அவ் வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

*அரசியலமைப் பின் 104உ என்னும் உறுப்புரை யைத் திருத்துதல்.*

''(1) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதி யொருவர் இருத்தல் வேண்டும்; அவர் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீது ஆணைக்குழுவினால் நியமிக்கப் படுதல் வேண்டும்.''.

**22.** அரசியலமைப்பின் உறுப்புரை 104ஏஏ இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 104ஏஏ என்னும் உறுப்புரையை நீக்கி விடுதல்.*

**23.** அரசியலமைப்பின் 107 ஆம் உறுப்புரை, அவ்வுறுப் புரையின் (1)ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

*அரசியலமைப் பின் 107 ஆம் உறுப்புரை யைத் திருத்துதல்.*

''(1) பிரதம நீதியரசரும், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும், உயர் நீதிமன்றத்தின் மற்றும் மேன்முறை யீட்டு நீதிமன்றத்தின் வேறொவ்வொரு நீதிபதியும், சனாதிபதியின் கைப்பட ஆணைமூலம் அவரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.''.

**24.** அரசியலமைப்பின் 109 ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது :- *அரசியலமைப்பின் 109 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

"பதில் நியமனங்கள். 109. (1) பிரதம நீதியரசர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவரது பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், அத்தகைய காலப்பகுதியின்போது முறையே பிரதம நீதியரசர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் பதவியில் செயலாற்றுவதற்கென, விடயத்திற்கேற்ப, உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வேறு ஒரு நீதிபதியைச் சனாதிபதி நியமித்தல் வேண்டும்.

(2) உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் எவரேனும் நீதிபதி, சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவரது பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், அத்தகைய காலப் பகுதியின்போது விடயத்திற்கேற்ப, உயர்நீதிமன்ற நீதிபதியாக அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாகச் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளைச் சனாதிபதி நியமிக்கலாம்.".

**25.** அரசியலமைப்பின் 111ஈ இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது :- *அரசியலமைப்பின் 111ஈ என்னும் உறுப்புரையை மாற்றீடு செய்தல்.*

"நீதிச்சேவை ஆணைக்குழுவின் அமைப்பு. 111ஈ. (1) பிரதம நீதியரசரையும் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் வேறு இரண்டு நீதிபதிகளையும் கொண்டுள்ள (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) நீதிச்சேவை ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பிரதம நீதியரசர் ஆணைக்குழுவின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 111உ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**26.** அரசியலமைப்பின் 111உ எனும் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (5) ஆம், (6) ஆம் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(5) சனாதிபதி, ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அவரது கடமைகளிலிருந்தான லீவை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய லீவுக்காலப்பகுதிக்குத் தற்காலிக உறுப்பினரொருவராகவிருப்பதற்கு ஆணைக்குழு வின் ஓர் உறுப்பினராகவிருப்பதற்குத் தகைமைபெற்ற ஆளொருவரை நியமிக்கலாம்.

(6) சனாதிபதி, குறித்தளிக்கப்பட்ட காரணத்துக்காக, ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.".

*அரசியலமைப்பில் புதிய 122 ஆம் உறுப்புரையை உட்புகுத்தல்.*

**27.** அரசியலமைப்பின் 121 ஆம் உறுப்புரையை உடனடுத்துப் பின்வரும் புதிய உறுப்புரை இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"அவசர சட்டமூலங்கள் தொடர்பில் அரசியலமைப்புச் சார் நியாயாதிக்கத்தின் விசேட பிரயோகம்.*

122. (1) அமைச்சரவையின் கருத்துப்படி தேசிய நலனுக்கு அவசரமாகவுள்ளதும் அமைச்சரவைச் செயலாளரின் கைப்பட அப்பொருள்பட புறக் குறிப்பொன்றைக் கொண்டுள்ளதுமான சட்டமூல மொன்றின் விடயத்தில் ,-

(அ) 78 (1) ஆம் உறுப்புரையினதும் 121 ஆம் உறுப்புரையினதும் ஏற்பாடுகள், இவ்வுறுப் புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக் கமைய, எந்த ஏற்புடைமையையும் கொண்டிருத் தலாகாது;

(ஆ) சனாதிபதி, பிரதம நீதியரசருக்கு முகவரி யிட்டனுப்பப்பட்ட எழுத்திலானவொரு குறிப் பீட்டின் மூலம், சட்டமூலம் அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு அரசியலமைப்புடன் ஒவ்வாததாகவுள்ளதாவென்பது பற்றி உயர் நீதிமன்றத்தின் விசேட தீர்மானத்தைத் தேவைப்படுத்துதல் வேண்டும். அத்தகைய குறிப்பீட்டின் பிரதியொன்று அதே நேரத்தில் சபாநாயகருக்கு வழங்கப்படுதல் வேண்டும்;

(இ) உயர் நீதிமன்றமானது, நீதிமன்றம் கூடுவதிலிருந்து இருபத்தி நான்கு மணித்தியாலங்களினுள் (அல்லது சனாதிபதி குறித்துரைக்கக் கூடியவாறு மூன்று நாட்களை விஞ்சாத அத்தகைய நீட்டிய காலப்பகுதியினுள்) அதன் தீர்மானத்தைச் செய்தல் வேண்டுமென்பதுடன் அதன் தீர்மானத்தைச் சனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் மட்டுமே அறிவித்தலும் வேண்டும்.

(2) உறுப்புரை 121 இன் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய சட்டமூலத்துக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டின் திருத்தம், நீக்கிவிடுதல் மற்றும் மாற்றீடு செய்தல், திருத்தியமைத்தல் மற்றும் அல்லது சேர்த்தலுக்கான அல்லது அரசியலமைப்பை நீக்கிவிடுதல் மற்றும் மாற்றீடு செய்தலுக்கான ஏதேனும் சட்டமூலத்திற்கு ஏற்புடையதாதலாகாது.".

*அரசியலமைப்பின் 123 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**28.** அரசியலமைப்பின் 123 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்து வதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(3) உறுப்புரை 122 இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகப் புறக்குறிப்பிடப்பட்ட சட்டமூலமொன்றின் விடயத்தில், சட்டமூலமானது அல்லது அதன் ஏதேனும் ஏற்பாடு அரசியலமைப்புடன் ஒவ்வாததாக உள்ளதென்று ஐயத்தை உயர் நீதிமன்றம் ஏற்று கவனித்தால், சட்டமூலம் அல்லது சட்டமூலத்தின் அத்தகைய ஏற்பாடு அரசியலமைப்புடன் ஒவ்வாததாக உள்ளதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் உயர் நீதிமன்றம் இவ்வுறுப்புரையின் (1) ஆம், (2) ஆம் பந்திகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 124 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**29.** அரசியலமைப்பின் 124 ஆம் உறுப்புரை, "120 ஆம் மற்றும் 121 ஆம் உறுப்புரையில் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு தவிர" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "120 ஆம், 121 ஆம் மற்றும் 122 ஆம் உறுப்புரைகளில் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு தவிர" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 134 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**30.** அரசியலமைப்பின் 134 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில் “121 ஆம்,125 ஆம்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “121ஆம், 122 ஆம் மற்றும் 125 ஆம்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**31.** அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

“(1) சனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டியவரும் நன்னடத்தையின்போது பதவி வகிக்க வேண்டியவருமான கணக்காய்வாளர் தலைமையதியொருவர் இருத்தல் வேண்டும்.”.

(2) அவ்வுறுப்புரையின் (4) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :-

“(4) கணக்காய்வாளர் தலைமையதிபதி தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராக உள்ளபோதெல்லாம், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் இடத்திற் செயலாற்றுவதற்குச் சனாதிபதி ஆளொருவரை நியமிக்கலாம்.”.

*அரசியலமைப்பின் 153அ என்னும் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

32. அரசியலமைப்பின் உறுப்புரை 153அ இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 153ஆ என்னும் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

33. அரசியலமைப்பின் உறுப்புரை 153ஆ இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 153இ என்னும் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

34. அரசியலமைப்பின் உறுப்புரை 153இ இத்தால் நீக்கப்படுகின்றது.

**35.** அரசியலமைப்பின் உறுப்புரை 153ஈ இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 153ஈ என்னும் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

**36.** அரசியலமைப்பின் உறுப்புரை 153உ இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 153உ என்னும் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

**37.** அரசியலமைப்பின் உறுப்புரை 153ஊ இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 153ஊ என்னும் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

**38.** அரசியலமைப்பின் உறுப்புரை 153எ இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 153எ என்னும் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

**39.** அரசியலமைப்பின் உறுப்புரை 153ஏ இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 153ஏ என்னும் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

**40.** அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

(1) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :-

"(1) எல்லா அரசாங்கத் திணைக்களங்களினதும், அமைச்சரவையின், நீதிச்சேவை ஆணைக்குழுவின், பகிரங்க சேவை ஆணைக்குழுவின், மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரின், பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின், தேர்தல்கள் ஆணையாளரின் அலுவலகங்களின் கணக்குகளையும் உள்ளூர் அதிகாரசபைகள், பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ்

அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட எவையேனும் தொழிற் பொறுப்பு முயற்சிகள் அல்லது வேறு பொறுப்பு முயற்சிகள் ஆகியவற்றின் கணக்குகளையும், கணக்காய்வாளர் தலைமையதிபதி கணக்காய்வு செய்தல் வேண்டும்.'';

(2) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியில் ''அத்தகைய பகிரங்க கூட்டுத்தாபனத்துக்கு, தொழிலுக்கு அல்லது வேறு பொறுப்பு முயற்சிக்கு அல்லது (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனிக்கு'' என்னும் சொற்களும் எண்ணும் அப்பந்தியில் காணப்படும் இடங்களில் எல்லாம் அவற்றுக்குப் பதிலாக ''அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு, தொழிற்பொறுப்பு முயற்சிக்கு அல்லது வேறு பொறுப்பு முயற்சிக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியில் ''ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத் துக்கு, தொழிற் பொறுப்புமுயற்சிக்கு அல்லது வேறு பொறுப்புமுயற்சிக்கு அல்லது (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் கம்பெனிக்கு'' என்னும் சொற்களும் எண்ணும் அப்பந்தியில் காணப்படும் இடங்களில் எல்லாம் அவற்றுக்குப் பதிலாக ''ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு, அல்லது தொழிற் பொறுப்பு முயற்சிக்கு அல்லது வேறு பொறுப்பு முயற்சிக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(4) அவ்வுறுப்புரையின் (9) ஆம் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்.

*அரசியலமைப் பின் 154ண என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**41.** அரசியலமைப்பின் 154ண என்னும் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில், அப்பந்தியில், (இ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

''(இ) மூன்று பிரதான சமுதாயங்களைப் பிரதி நிதித்துவப்படுத்துவதற்குச் சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஏனைய மூன்று உறுப்பினர்கள் ; அவர்கள் ஒவ்வொருவரும் நிதி, சட்டம், நிருவாகம்,

தொழில் அல்லது கற்றல் துறைகளில் சிறப்பெய்தியுள்ள அல்லது உயர் பதவி வகித்துள்ள ஆளொருவராக இருத்தல் வேண்டும்.''.

*அரசியலமைப்பின் 155அ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**42.** அரசியலமைப்பின் 155அ என்னும் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :-

''(1) சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஏழுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டதும் (இவ்வத்தியாயத்தில் ''ஆணைக்குழு'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) தேசியப் பொலிசு ஆணைக்குழு வொன்று இருத்தல் வேண்டும். சனாதிபதி தவிசாளராக ஓர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.''; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (4) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

''(4) ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் இவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியின்கீழ் ஏதேனும் தகைமையீனத்துக்கு உட்பட்டாலொழிய அல்லது சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியை முன்னரே துறந்தாலொழிய, அல்லது சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்குச் சட்ட நீதிமன்றமொன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டாலொழிய அல்லது 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவருக்குக் குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருந்தாலொழிய அல்லது இவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியின்கீழ் அவரது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.''.

**43.** அரசியலமைப்பின் 155ஆ என்னும் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்தியை நீக்கிவிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 155ஆ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**44.** அரசியலமைப்பின் 155இ என்னும் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில், ''நூற்றியிருப்பத்தாறாம் உறுப்புரையின்கீழ் உயர் நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்திற்கு மற்றும் 155ஔ என்னும் உறுப்புரையின்கீழ் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கும் அமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''நூற்றியிருபத்தாறாம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் உயர் நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்திற்கு அமைய" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 155இ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**45.** அரசியலமைப்பின் 155ஊ என்னும் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில், ''ஏதேனும் முறையில் ஆணைக்குழுவின் அல்லது குழுவின் அல்லது இவ்வத்தியாயத் தின்கீழ் ஏதேனும் தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு வின் எவரேனும் பொலிசு அலுவலரின் ஏதேனும் முடிபின்மீது செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற அல்லது தலையிடுகின்ற அல்லது ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர்மீது அல்லது ஒரு குழுவின் அல்லது ஏதேனும் தத்துவம் கையளிக்கப்பட்டுள்ள எவரேனும் பொலிசு அலுவலரின்மீது அவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற அல்லது தலையிடுகின்ற ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் முறையில் ஆணைக்குழுவின் அல்லது குழுவின் ஏதேனும் முடிபின் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற அல்லது தலையிடுகின்ற அல்லது ஆணைக்குழுவின் அல்லது குழுவின் எவரேனும் உறுப்பினர் மீது அவ்வாறு செல்வாக் குச் செலுத்த எத்தனிக்கின்ற அல்லது தலையிடுகின்ற ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன்,'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 155ஊ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**46.** அரசியலமைப்பின் 155ஊ என்னும் உறுப்புரையை உடனடுத்துப் பின்வரும் புதிய உறுப்புரை இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அரசியலமைப்பின் 155ஊஊ என்னும் உறுப்புரையாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*அரசியல மைப்பின் புதிய 155ஊஊ என்னும் உறுப்புரையை உட்புகுத்துதல்.*

"ஆணைக்குழுவின் தத்துவங்கள்.

155ஊஊ. ஒரு பொலிசு அலுவலருக்கெதிராக அல்லது பொலிசுப் படையினருக்கெதிராகப் பொது மக்களிடமிருந்தான அல்லது இன்னலுற்ற எவரேனும் ஆளிடமிருந்தான முறைப்பாடுகளை ஏற்றுக்கவனிப்பதற்கும் புலனாய்வு செய்வதற்கும் ஆணைக்குழுவுக்குத் தத்துவமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நிவர்த்தி யளித்தலும் வேண்டும். இந்நோக்கத்துக்காக ஆணைக்குழுவானது, பொதுமக்களிடமிருந்தான அல்லது இன்னலுற்ற எவரேனும் ஆட்களிடமிருந்தான முறைப்பாடுகளை ஏற்றுக் கவனித்துப் புலனாய்வு செய்வதற்கான நடவடிக்கை முறைகளைத் தாபிப்பதற்கு விதிகளை யாக்கலாம்.".

**47.** அரசியலமைப்பின் 155எ என்னும் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 155எ என்னும் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

**48.** அரசியலமைப்பின் 155ஏ என்னும் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 155ஏ என்னும் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

**49.** அரசியலமைப்பின் 155ஒ என்னும் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 155ஒ என்னும் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

**50.** அரசியலமைப்பின் 155ஓ என்னும் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 155ஓ என்னும் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

**51.** அரசியலமைப்பின் 155ஔ என்னும் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 155ஔ என்னும் உறுப்புரையை நீக்கிவிடுதல்.*

**52.** அரசியலமைப்பின் 155க என்னும் உறுப்புரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:-

*அரசியலமைப்பின் 155க என்னும் உறுப்புரையை மாற்றீடு செய்தல்.*

"ஏலவேயுள்ள விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் பேணல்.

155க. பொலிசு அலுவலர்கள் தொடர்பாக இவ்வுறுப்புரை தொடங்கும் திகதியன்று வலுவிலுள்ள எல்லா விதிகளும் ஒழுங்குவிதிகளும் நடவடிக்கை முறைகளும், பகிரங்கச் சேவை ஆணைக்குழுவினால் விதிகளும் ஒழுங்குவிதிகளும் நடவடிக்கை முறைகளும் இதன்கீழ் ஆக்கப்படும் வரை தொடர்ந்து நடைமுறையிருப்பனவாகக் கருதப்படுதல் வேண்டும்.".

அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**53.** அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :-

"(2) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் நன்நடத்தையின்போது பதவி வகித்தலும் வேண்டும்.".

(2) அவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :-

"(5) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் தமது பதவிக்குரிய கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இயலாதவராகவுள்ள போதெல்லாம், சனாதிபதி அவரிடத்திற் செயலாற்றுவதற்கு ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.".

அரசியலமைப்பின் XIXஅ என்னும் அத்தியாயத்தை நீக்குதல்.

**54.** அரசியலமைப்பின் XIXஅ என்னும் அத்தியாயம் (உறுப்புரை 156அ) இத்தால் நீக்கப்படுகின்றது.

அரசியலமைப்பின் XIXஆ என்னும் அத்தியாயத்தை நீக்குதல்.

**55.** அரசியலமைப்பின் XIXஆ என்னும் அத்தியாயம் (உறுப்புரை 156ஆ முதல் 156ஏ வரை) இத்தால் நீக்கப்படுகின்றது.

**56.** அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரை, ''பகிரங்க அலுவலர்'' என்னும் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :- *அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

''பகிரங்க அலுவலர்'' என்பது ஒரு நீதித்துறை அலுவலர் அல்லாதவரும் குடியரசின் கீழ் சம்பளம்பெறும் ஏதேனும் பதவியை வகிப்பவருமான ஆளொருவர் என்று பொருளாகும், ஆனால் பின்வருவோரை உள்ளடக்காது :-

(அ) சனாதிபதி ;
(ஆ) சபாநாயகர் ;
(இ) 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர் ஒருவர் ;
(ஈ) தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;
(உ) தேசியப் பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;
(ஊ) தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதி;
(எ) தேர்தல் ஆணைக்குழுவினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்கள் ;
(ஏ) நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;
(ஐ) பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ;
(ஒ) பிரதியமைச்சர் ஒருவர் ;
(ஓ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ;
(ஔ) பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ;
(க) சனாதிபதியின் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவர் ;
(ங) பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவர்.''.

**57.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பின்வருவோராகப் பதவி வகிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும், அதாவது :- *நிலைபெயர்கால ஏற்பாடுகள்.*

(i) *பிரதம நீதியரசர்* ;
(ii) *உயர் நீதிமன்ற நீதிபதிகள்* ;
(iii) *நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்* ;
(iv) *மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர்* ;
(v) *மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்* ;
(vi) *சட்டத்துறைத் தலைமையதிபதி* ;
(vii) *கணக்காய்வாளர் தலைமையதிபதி* ;
(viii) *பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி* ;
(ix) *நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்சுமான்)* ;
(x) *பாராளுமன்றச் செயலாளர் நாயகம்* ;
(xi) *மேல் நீதிமன்ற நீதிபதிகள்* ; *அல்லது*
(xii) *நீதிமுறை அலுவலர்கள், அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்கள், பகிரங்க அலுவலர்கள் அல்லது பொலிசு அலுவலர்கள்,*

*அவர் முன்னரே பதவிதுறந்தாலொழிய, இறந்தாலொழிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அத்தகைய பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டுமென்பதுடன் அதே நியதிநிபந்தனைகளின்கீழ் அப்பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் தொடர்ந்து பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.*

*2. அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினராக, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து அத்தகைய பதவியை வகிக்காதொழிதல் வேண்டும்:*

*ஆயின், அத்தகைய ஆட்கள் அவர்கள் முன்னரே பதவி துறந்தாலொழிய, இறந்தாலொழிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அரசியலமைப்பின் அத்தியாயம்* VII *அவிற்கிணங்கப் பாராளுமன்றப் பேரவை அமைக்கப்படும் அத்தகைய தேதி வரை தத்தமது முறையான பதவிகளுக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் தொடர்ந்து பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.*

*3. பின்வருவனவற்றின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும், அதாவது:-*

*(அ) தேர்தல் ஆணைக்குழு* ;
*(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு* ;

(இ) தேசிய பொலிசு ஆணைக்குழு;

(ஈ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு;

(உ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு;

(ஊ) நிதி ஆணைக்குழு ; அத்துடன்

(எ) எல்லை வரையறை ஆணைக்குழு,

அவர் முன்னரே பதவி துறந்தாலொழிய, இறந்தாலொழிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அரசியலமைப்பின் அத்தியாயம் VII அ விற்கிணங்க அந்தந்த ஆணைக்குழுக்கள் அமைக்கப்படும் அத்தகைய தேதி வரை தத்தமது முறையான பதவிகளுக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் தொடர்ந்து பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(4) (அ) கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் ; அத்துடன்

(ஆ) தேசியப் பெறுகை ஆணைக்குழுவின்,

தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக, இச்சட்டம் தொடங்கும் நாளன்று பதவி வகிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து அத்தகைய பதவியை வகிக்காதொழிதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய ஆள், அவர் முன்னரே பதவி துறந்தாலொழிய, இறந்தாலொழிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்றுள்ளவாறு முடிவுறாதுள்ள அல்லது பூர்த்தி செய்யப்படாதுள்ள கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றும் மற்றும் புரியும் நோக்கத்துக்காக, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஆறு மாதகாலப் பகுதியொன்றுக்குத் தத்தமது பதவிகளுக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் தொடர்ந்து பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்,–

(அ) கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவினாலும் தேசிய பெறுகை ஆணைக்குழுவினாலும் அல்லது அவற்றுக்கெதிராகவும் தொடுக்கப்பட்டுள்ளவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்றுள்ளவாறு முடிவுறாதுள்ளவையுமான எல்லாத் துடர்ச்சிகளும், குற்றவழக்குகளும், வழக்குகளும்

வழக்குநடவடிக்கைகளும், கருமங்களும் அல்லது காரியங்களும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து அரசாங்கத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டுள்ள துடர்ச்சிகளாகவும், குற்ற வழக்குகளாகவும், வழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும், கருமங்களாகவும் அல்லது காரியங்களாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் வழக்கு, கருமம், வழக்கு நடவடிக்கை அல்லது காரியத்தில் ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் அல்லது வேறு குழுவினால் கணக்காய்வுச் சேவை ஆணைக் குழுவினதும் தேசியப் பெறுகை ஆணைக்குழுவினதும் சார்பில் அல்லது அவற்றுக்கெதிராகப் பதியப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்வை, கட்டளை அல்லது அளிப்பு, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து அரசாங்கத்தின் சார்பில் அல்லது அதற்கெதிராகப் பதியப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஒரு தீர்வையாக, கட்டளையாக அல்லது அளிப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க வலுவுறுத்தப்படலாம் ; அத்துடன்

(இ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்றுள்ளவாறு கணக்காய்வுச் சேவை ஆணைக் குழுவுக்கும் தேசியப் பெறுகை ஆணைக்குழுவுக்கும் சொந்தமான அசைவுள்ள, அசைவற்ற எல்லா ஆதனங்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து அரசாங்கத்துக்குரித்தாதலும் அதன் ஆதனங்களாகக் கருதப்படுதலும் வேண்டும்.

6. இலங்கை அரச கணக்காய்வுச் சேவை உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுங்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிவிலகுகை தொடர்பானவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ளவையுமான எல்லாக் கருமங்களும், அத்தேதியிலிருந்து பகிரங்க சேவை ஆணைக் குழுவுக்குக் கைமாற்றப்பட்டனவாதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்கப் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக் கப்படுதலும் வேண்டும்.

(7) (அ) பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு மற்றும் பதவிவிலக்குகை பற்றியனவும்; அத்துடன்

(ஆ) தேசிய பொலிசு ஆணைக்குழுவுக்குப் பொலிசு அலுவலர் களினாலான மேன்முறையீடுகள் பற்றியனவும்,

இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று தேசியப் பொலிசு ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ளது மான எல்லாக் கருமங்களும், அத்தேதியிலிருந்து, பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்குக் கைமாற்றப்பட்டனவாதல் வேண்டுமென்ப துடன் அதற்கிணங்கப் பகிரங்க ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப் படுதலும் வேண்டும்.

**58.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.